
காஞ்சி

# நாடு



1-15 7-10-93

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை - 600 008.

## வள்ளுவர் - அண்ணா - வழியில்....?

— இனமானக் கவிஞர் இடிமுரசார் —

அன்பில் முகிழ்த்த அறிஞர்நம் அண்ணாபோல்

இன்பத்தில் தோய்ந்தநம் வள்ளுவர்போல் — நன்

மதியால்

இந்நிலத்தில் வாழ்வாங்கு; வாழும் வழிநடந்தால்

எந்நாளும் இன்பம் இனி!

''அன்பும் அறிவும் உயர்நிலை'' ஆன்றகுறள்

நன்மைசேர் நல்லறம் நாடுவோம்! — என்றும்

உலகின் இயல்பை; உணர்ந்தே நடப்போம்

நலம்பல காண்போம் நயந்து;

DCL-TNAL 03369

JL m2112,N92KN. N93.1-15 217214.

சிறப்பாசிரியர்: டாக்டர். சி.என்.ஏ. பரிமளம்.

# அண்ணா பற்றாளர்களுக்கு வேண்டுகோள்.

## பேரறிஞர் அண்ணாவின் நூல்கள்

## தொகுப்பு - திட்டம்

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள், கதைகள், கட்டுரைகள், நாடகங்கள், தம்பிக்கு கடிதங்கள், மிக சிறந்த முறையில் என்றென்றும் போற்றி பாதுகாக்கின்ற வகையில் 700 பக்கங்களுக்கு குறையாமல் நல்ல தரமான தாளில், வண்ண அட்டையுடன் வெளிவர இருக்கிறது, முதல் தொகுப்பு விரைவில் வெளிவருகிறது. ஒரு தொகுப்பின் விலை ரூ150 /- பதினைந்து தொகுப்புகள் வர இருக்கின்றன. ஒரு திங்களுக்கு ஒரு தொகுப்பு என்கிற வகையில்! ரூ. 150/- முன்பணம் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும், 1000 புத்தகங்கள் மட்டும் வெளியிட திட்டமிட்டுள்ளோம். ஆகையால் விரைவில் உங்கள் பெயரை பதிவுசெய்து கொள்ளவும்.

பின்குறிப்பு: காசோலை, பணவிடை அனுப்பவேண்டிய முகவரி,

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை,
7, அவின்யூ சாலை,
சென்னை- 600 034.
தமிழ் நாடு,
தென் இந்தியா.

---

காஞ்சி நாடு: உறுப்பினர் ஆகிவிட்டீர்களா?

உங்கள் உறுப்பினர் கட்டணத்தை புதுப்பித்து விட்டீர்களா?

JL
202113, N92kN
N93:1:15

# காஞ்சி நாடு

மலர்—1 7—10—1993 இதழ்—15

திருவள்ளுவர் ஆண்டு 2024 கன்னி (புரட்டாசி

புதியதோர் உலகம் செய்வோம்
கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்
—புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

# கைகோட்டி சிரிப்பார்கள்

மழை இன்றி தமிழ் நாட்டில் வரட்சி, பயிர்கள் வாடுகின்றன. கோயில்களில் சிறப்பு பூசை வருணபகவானிடம் மழை வேண்டி பூசைகள், கோயில்களில் படித்தவர், பாமரர், யாவரும் கலந்து கொள்ளுகின்றனர். அரசியல்வாதிகள் இதற்கு சிறப்பு அழைப்பினர். இது ஒரு புறம். இன்னொரு பக்கம் சுமார் 1½ கோடி செலவில் செயற்கை முறையில் மழை பெய்விக்க முயற்சி — விஞ்ஞான பூர்வமாக, இதற்கு மேல் நாட்டு நிபுணர்கள், அவர்கள் ஒத்துழைப்பு வேறு. இந்த நாட்டில் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது இந்தக் கூத்து. வெளி நாட்டில் உள்ளவர்கள் நம்மை பார்த்து இது என்ன வேடிக்கையான நாடு; இங்கு படித்தவர்கள் இருக்கிறார்களா? பகுத்தறிவுள்ளவர்கள் இருக்கிறார்களா? என கைகொட்டிச் சிரிப்பார்கள்?

பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை — துணிவு தெளிவு கனிவு

# செய்திகள்

## மதுரை மாவட்ட பொறுப்பாளர்கள் பட்டியல்

| | |
|---|---|
| புரவலர் | : திரு. மணிமொழியன். |
| தலைவர் | : திரு. கண்ணன். BA. LLB |
| துணைத்தலைவர் | : திரு. SPM சுலைமான். BA., BL. |
| செயலாளர் | : திரு. பெரியய்யா. |
| துணைச்செயலாளர் | : திரு இராசஇரத்தினம்' BA.,BL. |
| பொருளாளர் | : திரு. செயராமன் Bsc.,BL |
| செயற்குழு உறுப்பினர்கள் | : திரு. K.நாகராசன் B.com, BL. — — உத்தமப்பாளையம். |
| | வண்டியூர் இராமய்யா. |
| | கங்காதரன் M A — A. வள்ளாலபட்டி. |
| | அனிதா அமீது BA, BL. பெரியகுளம் |

---

மனம விசாலமானதாகவும். அதற்குள்ள நுழைவு வாயில தாராளமான போக்குவரத்துக்கு ஏற்றபடியும் இல்லாத காரணத்தாலே தான், கொள்கைபுகவும். வெளியேறவும், போராட்டமே நடைபெற வேண்டி ஏற்பட்டுவிடுகிறது மஎம் குகை போன்ற அமைப்பும் நிலையும் கொண்டிருக்கும் வரையில் இந்தக் கோரநிலைமை இருக்கும். மனம், விசாலமாக வேண்டும். நுழைவு வாயிலில் நெருக்கடி ஏற்படும் படியான நிலைமை இருக்கக்கூடாது மக்கள், தமது மனதை விசாலப் படுத்திக் கொண்டே இருக்க வேண்டும் ஏனெனில், ஒவ்வொரு நாளும் புதுப்புதுக் கொள்கைகள் இடந்தேடிக் கொண்டு வந்தபடிதான் இருக்கும் — விசாலம் அதிகமாகாவிட்டால், இட நெருக்கடி, நுழைவுச் சணடை எரபடும்.

— அறிஞர் அண்ணா

---



217214.

### அரியலூர்

செப்டம்பர் 15- அறிஞர் அண்ணா பிறந்த நாள்விழா திருச்சி அரியலூர் மாவட்ட, அரியலூர் அண்ணா சிலைக்கு அரியலூர் Ex M L A ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஊர்வலமாகச் சென்று அவர் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

திருச்சி அரியலூர் மாவட்ட பேரறிஞர் அண்ணா இலக்கிய பேரவை சார்பில் அதன் மாவட்டத் தலைவர் T. A. P. பழனிசாமி B. A. B. L. மாலை அணிவித்தார் மாவட்டச் செயலாளர் கோதாண்ட ராமன், அரியலூர் ஒன்றிய செயலாளர் M பாண்டுரங்கன் கலந்து கொண்டனர். K. கலியபெருமாள், ஒன்றிய இளைஞர் அணி அமைப் பாளர், R முருகேசன் அரியலூர் ஒன்றிய துணை செயலாளர் பேரவை, மற்றும் பலர் மாலை அணிவித்தனர்.

### உடையார் பாளையம்

செப்டம்பர் 15 பேரறிஞர் அண்ணா இலக்கியப் பேரவை சார்பாக உடையார் பாளையத்தில் அறிஞர் அண்ணாவின் 85 வது பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது.

செயலர் த. கோதாண்ட ராமன் B A. மாவட்ட செயலாளர் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்தார் பேரவை ஒன்றிய அவைத் தலைவர் C. சம்பத்துரை த. ஆறுமுகம் நகர அவைத்தலைவர் R. வெங்கட்ராம் நகர துணை செயலாளர் M. அய்யப்பன் நகர பொரு ளாளர் H. சுந்தரராஜ் B com., தளசிங்கு மற்றும் N தங்கவேலு திமுக நகர அவைத்தலைவர் க. ஜெகன் மற்றும் பேரவை உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

# தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா

பெரியார் மாவட்டம் புன்செய்புளியம்பட்டியல் 21-9-1993 காலை 9. 30 மணி அளவில் அண்ணா சீரணி அரங்கத்தில், பெரியார் — அண்ணா சிந்தனையாளர் பேரவையின் சார்பில் தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா சிறப்பாக நடை பெற்றது.

பெரியார் அண்ணா சிந்தனையாளர் பேரவைத் தவைர் திரு. P. A. சாமிநாதன். Ex. MP. தலைமை தாங்கினார் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் திரு. பு. கா. ஆறுமுகம் வரவேற்புரை

யாற்றினார், கோபி, கவிஞர் புதுமதியன் அவர்கள் தந்தையும் தனயனும் எனும் தலைப்பில் கவிதை பாடினார். பேரறிஞர் அண்ணா படத்தை திறந்து வைத்து திரு. G. P. வெங்கிடு, பொதுச் செயலாளர் பெரியார் அண்ணா சிந்தனையாளர் பேரவை, சொற்பொழிவாற்றி னார். தந்தை பெரியார் படத்தை திறந்து வைத்து, CNA பரிமளம் சொற்பொழிவாற்றினார். நன்றி கூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

## அண்ணா தமிழ்க் கழகம் -- காரைக்குடி

காரைக்குடி ஞானந்தா மண்டபத்தில் காரைக்குடி அண்ணா தமிழ்க்கழகம் 20 ஆண்டாக அண்ணா விழாவை நடத்தியது பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா நடைபெற்றது.

24 - 9 - 93 மாலை 7 மணிக்கு திரு. வை. கோபால் சாமி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

25 - 9 - 93 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது டாக்டர் மா. எழில் முதல்வன். திரு. என் ஜெய்வேந்திரன் புலவர். அறிவுடை நம்பி, திரு. துரை முருகன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஞாயிறு காலை 26 - 9 - 93 அன்று கவியரங்கம் நடைபெற்றது அன்று மாலை 6 · 30 அளவில் பட்டி மன்றம் நடைபெற்றது.

டாக்டர் குன்றகுடி அடிகளார் நடுவராக பொறுப்பேற்று பட்டி மன்றத்தில் பல அறிஞர்கள் சொற்பொழிவாற்றினர் திரு. சாமி திராவிடமணி நன்றி கூற விழா முடிவுற்றது.

---

## மகாத்மா காந்தி - அறிஞர் அண்ணா

அவர் பிறந்த போது - நாடு அடிமை
அவர் மறைந்த போது - நாடு விடுதலை
அவர் பிறந்தபோது—தீண்டாதாருக்கு கோயில்கள் மூடிக்கிடந்தன
அவர் மறைந்த போது — தீண்டாதாருக்கு கோயில்கள் திறந்து விடப்பட்டன
அவர் பிறந்த போது — பிரிட்டிஸ் ஆதிக்கம்
அழித்தார் — வெள்ளையன் வெளியேறுவதை பார்த்த பிறகே மறைந்தார்...
இவ்வளவையும் அவர் மந்திரக்கோல் கொண்டோ,
யாக குண்டத்திற்கருகே நின்றோ
சாதிக்கவில்லை!
ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான்,
மற்றொரு தலை முறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பர்.
பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல் வழி காட்டுவர்.
காந்தியாரிடம் இந்த மூன்று பண்புகளும்
ஏக காலத்தில் இருந்தது.
விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு. போர்த்திறனால்!
நல்லாட்சி நிறுவியர்கள் உண்டு அறிவின மேம்பாட்டினால்!
மக்களை நல்லவர்களாக்கியவர் உண்டு தூய்மையினால்!
மூன்று அரும்பணிகளையும் ஒரு சேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு
உத்தமர் காந்தியார் ஒருவருக்கே உண்டு.

வானொலி சொற்பொழிவு 1948

# பொன் விலங்கு

பேரறிஞர் அண்ணா

## அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும்!

......ஆகையால் தான், பல தடவை எடுத்துச் சொன்னது போல் இந்த முறையும் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். எப்படி தனிப்பட்ட அங்கத்தினர்கள் அமைச்சர்களைப் பார்த்து ''இந்த ஏரிக்கரையை உயர்த்திக்கொடுங்கள், அமோனியம் சல்பேட் கொடுங்கள்'' என்று கேட்கிறார்களோ, அதைப் போல், இங்கே (மாநிலத்தில்) இருக்கும் அமைச்சர்கள் அங்கே (மத்திய அரசின்) சென்று எங்களுக்கு இன்னது தேவை என்று கேட்கிற நிலை இருக்கிறதே தவிர, பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கத்தக்க அளவுக்கு இந்த மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை.........திரும்பத் திரும்பச் சொல்லுகிறேன்; இந்த மாநில அரசுக்குப் பொருளாதாரத் துறையைச் செம்மைப் படுத்தத்தக்க அதிகாரம் இல்லாத காரணத்தால் தான், எவ்வளவு திட்டங்கள் தீட்டினாலும் அதை நிறைவேற்றிச் செல்வதிலே ஏற்படக்கூடிய சாதக பாதகம் அத்தனையும், மத்திய சர்க்கார் எப்படி நடக்கிறார்களோ அதைப் பொறுத்திருக்கிறது...... இந்த மாநிலத்துக்குத் தேவையானது அத்தனையும் நிறைவேற்றுவதற்கான அதிகாரங்களை நீங்கள் மத்திய சர்க்காரிடம் கேட்டுப்பெறவேண்டுமென்று நான் கூறுகிறேன்......

ஆகையால் தான் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பற்றி நான் சொல்லுகிற முதல் கருத்து, அதை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஆற்றல், அதிகார பலத்தை நம்மிடத்திலே ஒப்படைக்காமல் வேறு இடத்தில் குவிக்கப்பட்டிருக்கின்றது.

முதலிலே, குவிக்கப்பட்டிருக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டாலொழிய, அப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கில்லை என்பதை நான் எடுத்துச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின் மீது பேரறிஞர் அண்ணாவின் சட்டமன்ற பேச்சு......... 9/60,

## பொன் விலங்கு

யார் ஆட்சி பீடத்தில் அமர்ந்தால் என்ன? காங்கிரசைத் தவிர ஆட்சி பீடத்தில் அமர்த்தப்படுகின்ற எந்தக் கட்சியும் தனது கொள்கை

கோட்பாட்டின் வழி ஆட்சி மாற்றி அமைத்திடவும் ஊழல்களைப் போக்கிடவும் நல்லாட்சியை ஏற்படுத்தவும் இயலாது என்ற ஓர் பரிதாபகரமான பயங்கரமான நிலை மாநிலங்களுக்கு இருக்கும் போது, காங்கிரசை ஆட்சி பீடத்திலிருந்து இறக்கிவிட்டு அந்த இடத்தில் வேறோர் கட்சி அமைவதிலே என்ன பயன் விளைந்துவிடப்போகிறது? அதிகாரமில்லாத ஆட்சியின் பொறுப்பினை அடைந்தென்ன! அடையாமல் இருந்தென்ன!

தேர்தல் களத்திலே கிடைக்கக்கூடிய வெற்றி ஆட்சிபீடத்திலே அவர்களை அமர்த்திட; அங்ஙனம் அமர்த்தப்பட்டவர்கள் ஏதும் செய்ய இயலாத நிலையில் தமது கரங்கள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை உணரவேண்டிய நிர்பந்தம் ஏற்படும். கேலிக்குரியவர்களாவரர்கள்! வென்றவர் தோற்றார் என்று வரலாற்றிலே பொறிக்கப்படும் அவர்களைப்பற்றி.

ஆட்சி பீடத்திலே அமர்த்தப்பட்டாலும், அவர்களாலும் அவர்களைப் போன்ற மற்ற மற்ற ஆட்சியினராலும், அவர்கட்கு ஆதரவு தந்த மக்களுக்கு எந்தவித உருப்படியான நிலைமையையும் செய்து தர முடியாத நிலை இருக்கின்றதென்று நாம் கூறுவதற்குக் காரணம் இந்த துணைக்கண்டத்து அரசியலமைப்பில் மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகார வரம்பு மிகக் குறைவு என்பதாலே தான்.

இந்திய அரசியலமைப்பு என்ற ஒரு பொன்விலங்கு பூட்டப்பட்டிருக்கின்றது மாநிலங்களின் கரங்களில்.

அதனாலே மாநிலங்களிலே ஆட்சி பீடத்திலே அமர்த்தப்படுகிற எவரும், டில்லி மூலவரின் ஆணைக்குக் கட்டுப்பட்ட அவர்கள் கிழிக்கின்ற கோட்டைத் தாண்ட முடியாத வகையில் நடந்தாக வேண்டும்.

எஜமானனாக இருந்து டில்லி அவர்களை ஆட்டிப்படைக்கும். எடுபிடிகளாக இருந்து குற்றேவல் புரிந்தாக வேண்டியவர்கள் இவர்கள்! அடிக்கொரு முறை காவடி எடுத்து ஐயனே! முருகனே! என்று அகவல் பாடி, தேவைகளை நேரம் பார்த்து பக்குவமாக எடுத்துக்கூறி கிடைத்தைப் பெற்று, இயன்றால் மகிழ்ந்து, இல்லையானால் மனக்குமுறலை மிக ஜாக்கிரதையாக மூடி மறைத்து, போதுமென்ற மனமே - பொன் செய்யும் மருந்து என்ற 'திருப்தி'யை வரவழைத்துக்கொள்ள வேண்டும்.

18 - 2 - 1959 திராவிட நாடு

**என் லட்சிய பூமி:**

என் நெஞ்சத்தில் நிரம்ப இடம் இருக்கின்றது, அது திருட்டுப் போய்விடுமோ என்று அஞ்சவேண்டியதில்லை! என் இதயக்கதவுகள் என்றும் திறந்தே இருக்கின்றன. எவருக்கும் அதில் இடமுண்டு.

என் இதயத்தில் ஒருமுறை இடம் பெற்றவர்களை வெளியே போகவிடமாட்டேன், என்னை விட்டுப்போன ஒருசிலரும் என் இதயத்தில் ஓட்டை போட்டுக்கொண்டு போனார்களே தவிர வாசல் வழியே போகவில்லை.

...எல்லாரும் இன்புற்று வாழும் இடம் தான் என் லட்கியபூமி, ஒருவரை ஒருவர் அழுத்தாமல் ஒருவரை ஒருவர் சுரண்டாமல். ''எல்லோருக்காகவும் நான்; எனக்காக எல்லோரும்'' என்ற முறையில் சமூகம் அமையுமானால் அது தான் என் லட்சிய பூமி.

அரசியல் முறையில். அதை, ''Federalism'' ''கூட்டாட்சி'' என்று சொல்லலாம். பொருளாதாரத் துறையில் ''Socialism'' ''சமதர்மம் என்று சொல்லலாம். அரசியல் அமைப்பு முறைப்படி அதை, ''Democracy'' ''சனநாயகம்', என்று சொல்லலாம். இலக்கியத் துறையில் அதை ''Idealism'' என்று கூறலாம். எல்லோரும் இன்புற்றிருக்கும் அந்தப் பூமிதான் என் லட்சிய பூமி!

...எனக்குக் கிடைத்திருக்கிற படைக்கருவிகள் தூய்மையாக இருக்கின்றன. கூர்மையாக இருக்கின்றன. தோழமை கட்சிகள் துணைநிற்க, வெற்றிப் பாதையில் நடைப்போட்டு, உறுதியாகச் செயல்பட்டு, இறுதியாக இலட்சிய பூமியை அடைவோம்!

1 - 1 - 67 விருகம்பாக்கம் மாநாட்டில் முடிவுரை.

ஆட்சியை கைப்பற்ற வேண்டும் அமைச்சரவை ஏற்க வேண்டும் என்பதுதான் கழகத்தின் இறுதி முடிவு என்று யாரும் கருதிவிடக் கூடாது அதுதான் இலட்சியம் என்றால் பார்க்கவேண்டியர்களைப் பார்த்து கொடுக்கவேண்டியவைகளைக் கொடுத்து அழைத்து பதவியைப் பெறுவது என்பது முடியாத காரியமல்ல.

தமிழ் மொழியைக் காத்தாகவேண்டும்: தமிழ்இனத்தை, தமிழ்ப்

பண்பாட்டைக் காத்திடவேண்டும். இதற்கு இன்னும் ஐம்பது ஆண்டுகளாவது தொடர்ந்து உத்வேகத்துடன் பாடுபட்டால் தான் உலக வரலாற்றில் நாங்கள் தமிழர்கள் என்று தலை நிமிர்ந்து கூறக்கூடிய நிலை ஏற்படும்! எனவே புதிய வரலாற்றில் சிறப்பான அத்தியாயத்தை தோற்றுவிக்க வேண்டும். அந்த இலட்சியத்தை அடைய நான் மேற்கொள்ளும் பணியில் நீங்கள் பங்கு கொள்ள அழைக்கின்றேன் அண்ணனின் இந்த அழைப்பை அலட்சியப்படுத்த மாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்; நம்முன் இருப்பது மகத்தான பணி.

20 - 12 - 66 விருகம்பாக்கம் மாநாட்டில்
அண்ணாவின் தலைமையுரை.

# சமூகம் படிக்கிறது

முன்பு ஒரு காலத்தில் சில பகுதி மக்கள் படிக்க முடியாது: அவர்கள் படிக்கக் கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர்

நல்ல வேளையாக சமூகப் புரட்சி துவங்கி விட்டது. நூற்றுண்டுக் காலங்களாகப் பழக்கத்தில் இருந்த அடக்கி வைக்கும் முறை மறைந்தது'

இப்போது எல்லோரும் படிக்கலாம். வாயில் வெள்ளிக் கரண்டியால் உணவுஊட் டப்படும் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளை யானலும் கலயத்தில் கஞ்சி குடிக்கும் ஏழையின் மகன் ஆனாலும் யார் வேண்டுமானாலும் சரி. இப்போது படிக்கலாம்.

இதில் மனிதனுக்கு மனிதன் பேதமில்லை. ஒருவன் கல்வி கற்றால் சமூகம் படிக்கிறது என்று பொருள்

—பேரறிஞர் அண்ணா

# அறநெறி

இயங்குதல் வாழ்க்கையின் இலக்கணம் இனியன புரிதல் அறநெறியாகும். அறநெறியதனை அடவி ஏகாமல் மாடும் மனையும் சூழ இருந்திடும் மாண்புமிகு இல்லறம் அதனிலேயே பெற்றிட இயலும் என்று கூறினர் தமிழர் துறவோரும் இவரில்லை யெனில் (இல்லத்தார்) இல்லை யாங்கள் என்றார் உணர்ந்து.

திராவிட நாடு 14 · 1 · 1961

# இதயமே! எழுந்துவா!

ம. சாலமன் எம். ஏ. எம். எட்

| | | | |
|---|---|---|---|
| | தெள்ளுத் | தமிழ் | வித்தகனே! |
| | தெளிந்தோர் | பாட்டின் | முத்தகனே! |
| | தெவிட்டாத | தேன் | தமிழே! |
| | தென்னவனே | ''காஞ்சிநாடு'' | செல்வா! |
| 2. | எதையும் | தாங்கும் | இதயமே! |
| | எழுந்துவா! | என் | அண்ணா! |
| | நின் எழுதுகோல் | எடுத்துவா! | அதை |
| | எழும்சுடர் | காஞ்சிஏட்டில் | தீட்டிடவா! |
| 3. | பெற்ற | நாட்டிற்குப் | பெயர்சூட்டி |
| | பெருமை | சேர்த்தாய்! | என் அண்ணா! |
| | பெரும் | புகழ் | குறள்நெறியான |
| | பொதுமைத் | தேன்குரலே | எழுந்துவா! |
| 4. | கொள்கை | போற்றி | குணம்காத்து |
| | கொத்துமலராய் | நெஞ்சில் | பூத்தவனே! |
| | கொஞ்சும் | தமிழ் | புன்னகையில் |
| | கோவைத் | தமிழ்பேச | எழுந்துவா! |
| 5. | அண்ணா | முத்தமிழ் | மன்னா! |
| | அமைதியில் | ஓய்வெடுக்கச் | சென்றாலும் |
| | நின்அலைக்குரல் | ஓய்வெடுத்த | துண்டோ? |
| | அருந்தமிழ் | இதயமே! | எழுந்துவா! |
| | | | அண்ணா! |

---

# தொழிலாளர்களின்
# கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு

கடமை - பாட்டாளிகளுடைய கடமை, சமுதாயத்திற்கு நன்மை செய்வதிலே இருக்கிறது.

அவர்களுடைய கண்ணியம் தங்களுடைய சக்தியைப் பாழ்படுத்திக் கொள்ளாததிலே இருக்கின்றது.

அவர்களுடைய கட்டுப்பாடு. தங்களுடைய ஒற்றுமையை உடைப்பதற்கு யார் எந்த மாதிரி முயற்சி எடுத்துக் கொண்டாலும் ஒரு துளியும் இடம் கொடுக்காத தன்மையிலே இருக்கின்றது.

—பேரறிஞர் அண்ணா

# அண்ணாவின் மேடைத் தமிழ்

அ. க. மூர்த்தி

## 5. அண்ணாவின் மொழிகளும் கருத்துகளும்

### ஆன்றமொழிகள்

ஒரு கருத்தைச் செறிவாகவும் சுருக்கமாகவும் நகைச்சுவையோடும் உரைப்பதற்கு ஆன்ற மொழி என்று பெயர் இது பழமொழி போன்றது. இம்மொழிகளைக் கூறுவதில் அண்ணா வல்லவர் ஒரு சிலவற்றை இங்கு அகரவரிசைப் படுத்திக் காண்போம்,

அறிவிப்பு சாதனை அல்ல.
இது பாமரனின் காலம்.
இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?
(மனோன்மனியத்தை தழுவியது)
எதையும் தாங்கும் இதயம் வேண்.டும்.
ஏழையின் சிரிப்பில் இறைவன்
கடமை கண்ணியம் கட்டுப்பாடு.
கத்தியைத் தீட்டதே உன் புத்தியைத் தீட்டு.
சட்டம் ஒரு இருட்டரை; அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு.
சர்வாதிகாரம் ஒரு காட்டுத்தீ.
நல்லவன் வாழ்வான்.
மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு.
மறப்போம் மன்னிப்போம் (சர்ச்சில் மொழியைத் தழுவியது)
மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு.
மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.
மூணுமுணுப்பு இன்று இடிமுழக்க மாகிவிட்டது.
வீட்டிற்கோர் புத்தகச்சாலை நாட்டிற்கு நலந்தரும்,

### கருத்துக்கள்

ஒரு சில பொறுக்குமணிகள் இங்கு அகரவரிசையில் தரப்படுகின்றன.

அரசியலில் கருத்துவேறுபாடு இருக்கலாம். ஆனால் (அது) கசப்புனர்ச்சியை வளர்க்கக் கூடாது.

ஒரு நாட்டின் நிலையான பெருமைக்கும் செல்வத்திற்கும் ஊன்றுகோலாக இருப்பது கல்வியே.

ஒருவரை நாம் மதித்திடும் நேரத்தில் மாறானக் கருத்து கொண்டவர்களும் (அவர்களை மதிக்கிறார்கள் என்பதை அறியும் போது ஏற்படும் இனிமையை விட வேறு ஓர் இனிமை இருக்க முடியாது.

கருத்தாழமிக்க நூல்கள் பொதுமக்கள் ஆதரவு தர வேண்டும்.

கலந்துரையாடியே பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும்.

கலை என்பது மக்களைக் கட்டியாள்வது; அரசியல் என்பது மக்களைக் கட்டியாண்டு திருத்துவது.

சமுதாயச் சீர்திருத்தம் வேறு; சமுகச்சேவைவேறு; சர்க்கார் வேறு; கட்சி வேறு.

தமிழக அரசினுடைய எல்லா வளமுமே இன்று காவிரி ஆற்றில் இருக்கிறது.

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும்.

தொடக்கம் தூய்மையாக இருந்தால் தான், தொடுப்பும் முடிப்பும் சரியாக அமையும்.

பகுத்தறிவு என்பது அடிப்படை உண்மைகளையும் வெளிப்படை உண்மைகளையும் மறுப்பதன்று. ஆனால், எண்ணம், செயல், ஆகியவற்றில் உள்ள ஐயுறவு நிலைகளை அழிப்பதாகும் அஃது,

பண்பாடுடைய ஒருவரைப் பாராட்டுவது தமிழ்ப்பண்பாடு ஆகும்.

நம் ஆவலின் அளவு சாதனைகளின் அளவை மீறியதாகும்.

நாட்டிலுள்ள நிதிநிலைமை மூலப்பொருள், தொழில்நுட்ப அறிவு முதலியன ஒருங்கிணைந்து செயற்படும் ஒருமைப்பாடே உண்மையானதாக இருக்க முடியும்,

நல்லவர்கள் குடிப்பதில்லை; குடிப்பவர்கள்
நல்லவர்கள் அல்லர்.

மக்களாட்சி என்பது ஓர் அரசுவகை மட்டுமன்று; அது புதிய வாழ்க்கைக்கு ஓர் அமைப்பு; நலன்களையும் நாட்டங்களையும் பொறுப்புகளையும் பகிர்ந்து கொள்ளும் கலையில் ஓர் ஆய்வு, பொதுத் தொண்டிற்காக ஒவ்வொரு தனியாளிடமும் உள்ள இயல்பான ஆற்றலை இயக்குவதற்கும் ஒருமுகப்படுத்துவதற்குமான ஒரு முயற்சி.

மரபு என்பது இப்போது மறதியாகிவிட்டது.

மாநில அரசாங்கங்கள் மதிப்பில்லாமல் போனதற்கு மாநில அரசுகளே தான் பொறுப் பேற்க வேண்டும்.

மொழி பெயர்க்கும் பொழுது கருத்துகளைத் திரட்டித் தர வேண்டும்.

ஜனநாயகத்திற்கு மக்களால் எந்தவித ஆபத்துமில்லை.

அடுத்த இதழில் அண்ணா கூறும் செய்தியும் அண்ணாவின் ஆய்வாளர்களும்.

---

## கல்லூரி மாணவ மாணவியர்க்கான
## ''அறிஞர் அண்ணா நினைவு''
## சொற்பொழிவுப் போட்டி

அமெரிக்காவில் இயங்கும் தாமிழ்நாடு அறக்கட்டளையின் சார்பில், ஒஹையோ மாநிலத்தைச் சார்ந்த திரு. சி. கே. மோகனம் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு ஒரு திட்டம் உருவாக்கப் பட்டுள்ளது.

தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்லூரி மாணவ - மாணவியரும். தங்கள் கல்லூரியின் அத்தாட்சிக் கடிதத்துடன் இதில் கலந்துகொள்ள, 31 - 10 - 93 -க்குள் தமிழக முதறிஞர் குழு - 50, ஈ. வெ. கி. சம்பத் சாலை, சென்னை - 7 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம்.

முதல் பரிசு; 10,000 ரூபாய்
இரண்டாம் பரிசு: 5,000 ரூபாய்

வரும் விண்ணப்பங்களின் எண்ணிக்கையைப் பொறுத்து சொற்பொழிவின் பொருள், மணித்துளிகள், போட்டி நடக்கும் இடம், நாள், நேரம் ''விடுதலை''யில் அறிவிக்கப்படும்.

# அறிஞர் அண்ணாவின் தன் வரலாறு (15)

— Dr. சி. என். ஏ. பரிமளம் —

ஒரு பெரிய தவறான கருத்தைக் கொண்டுவிட்டு, அதன் பயனாக மிகுந்த கஷ்டப்படுகிறார் பெரியார். அதாவது, நான் ஏதோ, மிக மிகப் பிரயாசை எடுத்துக் கொண்டு, தந்திரமாகத் திட்டமிட்டு, ஊரெங்கும் அன்பர்களைத் தூது அனுப்பி, ஒரு எதிர்ப்பு முன்னணியை அமைத்து வைத்திருப்பதாகக் கருதுகிறார். எதிர்ப்பு முன்னணி அமைந்திருப்பதும் உண்மை- அது இன்று, தனி அமைப்பாகத் தழைத்திருப்பதும் உண்மை; ஆனால் இந்த நிலைமையை உண்டாக்க நான்ஏதோ இரவு பகலாக, சாமர்த்தியத்தை எல்லாம் செலவிட்டு வந்திருக்கிறேன்» என்று எண்ணுகிறாரே, அதுதான் தவறு. இந்தத் தவறான கருத்திலிருந்து, மற்றும் பலப் பல தவறுகள் முளைக்கின்றன—சகஜமாகவே.

நிலைமை என்னை உண்டாக்கிற்று—நிந்தனை என்னை வளர்க்கிறது.

நிலைமையை நான் உண்டாக்கவில்லை—நிந்தனை எனக்குப் பழக்கமற்ற காரியம்.

திராவிடர் கழகத்திலே பிளவும் பேதமும் ஏற்படா முன்பு, என்னை அழைப்பதிலே ஒரு ஆனந்தமும் வரவேற்று உபசரிப்பதிலே ஒரு பூரிப்பும், இன்று பேதபட்டதால் கோபப்பட்டுள்ள பல தோழர்களுக்கு இருந்த நாட்களிலேயே, என்மீது இருந்துவந்த புகார், நான் அக்கரையற்று இருக்கிறேன்—தொடர்பு அற்று இருக்கிறேன்-பத்துத் தடவைகள் தொல்லை படுத்தினால் தான் ஒரு தடவை வருகிறேன்—என்பவையாகும். மாலையும் மகிழ்ச்சியும், அன்பும்ஆதரவும் தருவதற்கு, நீடாமங்கலம் ஆறுமுகமும், நடிகவேள் ராதாவும், நாட்டரம்பள்ளி வெங்கட்ராமனவர்களும் மற்றும் பல அன்பர்களும், விரும்பியிருந்த போதே, நான், ஏறத்தாழ நழுவிக்கொண்டு இருந்தவன், அப்படிப் பட்ட சுபாவக் காரனகிய நான், ஏதோ, விநாடிக்கு விநாடி திட்டமிட்டு, ஊருருக்கும் உள்ளவர்களின் கணக்கெடுத்து, திட்டமிட்டு, எதிர்ப்பு, முன்னணியை ஏற்படுத்தியதாக எண்ணுவது, என்னை அறிந்திருந்தும் சரியாகப் புரிந்து கொள்ளாத குற்றம் தான்.

பெரியாரின் திருமண ஏற்பாடு, இயற்கையாக உண்டாக்கிய நிலைமை தான், எதிர்ப்பு முன்னணி அமைந்ததற்குக் காரணம்—நான் அல்ல.



JL
M2H3 N92 KN
N93.1.15
217214
சென்னை-600 038

நான், திருமண விஷயமாக எடுத்து எழுதியதனால் அல்லவா இந்நிலைமை ஏற்பட்டது என்று எண்ணிடத் தோன்றும். அதுவும் அல்ல காரணம். நான், அதை எழுதும் போதே, என் ஒருவனுடைய கருத்தாகவோ, பிரசாரமாகவோ அந்த அறிக்கை உருவெடுக்கவில்லை. பெரியாரின் திருமணஏற்பாட்டினால், உள்ளம்கொதித்த தோழர்கள் பலரின் எண்ணத்தொகுப்பாகவே வெளிவந்தது. அதாவது நான். அந்த அறிக்கையை வெளியிடும் போதே, எதிர்ப்பு முன்னணி அமைந்து விட்டது. நான் அல்ல அமைத்தது. அதாவது, எதிர்ப்பு முன்னணி, என் கபடம் அல்லது கயமைத் தனம், தந்திரம் தந்திரம் அல்லது திறமை, ஓயாத வேலை அல்லது மயக்கும் திட்டம், என்பவைகளால் அமைந்தது அல்ல - இயற்கையாகவும் ஜனநாயக முறைப் படியும் அமைந்தது, எனவேதான் அந்த முன்னணியிலே 'ஜீவசக்தி' இருக்கிறது.

இதை உணர்ந்தால் தான், நிலைமையை உள்ளபடி கணித்துக் கொள்ளமுடியும்.

பெரியாரும் அவருடைய ஆதரவாளர்களும், இந்த இடத்திலே தான், தவறான கருத்தைக் கொண்டு, விடுகின்றனர். நான் விடாபிடியாக இருந்துகொண்டு, விஷமத்தனமான பிரசாரம் செய்து, பலரை மயக்கிக் கெடுத்து விட்டேன், அதன் பயனாகவே ஒரு எதிர்ப்பு முன்னணி ஏற்பட்டுவிட்டது என்று எண்ணுகிறார்கள். தவறு. தவறு. பெரும் தவறு. நிலைமை இயற்கையாகவும், ஜனநாயக முறைப்படியும் வளர்ந்தது.

நான் ஒரு அறிக்கை வெளியிட்டா, இவ்வளவு தோழர்களை மயக்கிவிடமுடியும்! அவ்வளவு ஆற்றல் இருப்பதனால், நான் ஆகஸ்டின் போது வெளியிட்ட அறிக்கையும் ஒரு எதிர்ப்பு முன்னணியை அமைத்திருக்கவேண்டுமே! நடைபெற்றதா அதுபோல இல்லையே! நடைபெறாது என்பது எனக்கே தெரிந்துதானே அந்த அறிக்கையிலேயே. என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதனாலும் எடுக்கட்டும், என்று எழுதினேன். ஆகஸ்ட்டு அறிக்கையின் போது, ஆசைத்தம்பியும் வள்ளி முத்துவும், சிற்றரசும் சீனிவாசனும் மற்றும் எண்ணற்றப்பல தோழர்களும், அண்ணா எழுதி விட்டார், ஆகவே அதுதான் சரி, என்றா கூறினார்கள் அவ்வளவு நெஞ்சு உரம் அற்றவர்களல்லவே, தமது தோழர்கள். என் கருத்தை ஒப்புக்கொள்வதற்கில்லை என்று கூறினார் — கண்ணியமாக.

ஆகஸ்ட்டிலே நான் தீட்டிய அறிக்கைக்குக் கிடைக்காத 'ஆதரவு', திருமணப் பிரச்சனையின் போது நான் வெளியிட்ட கருத்

துக்குக் கிடைத்ததற்கு காரணம் என்ன என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? இதை நன்கு சிந்தித்தால், தெளிவாகத் தெரிந்துவிடுமே. எதிர்ப்பு முன்னணி என்பது என் மயக்க மொழியின் விளைவுமல்ல, சுய நலத் திட்டத்தின வெற்றியுமல்ல! இயற்கையின் விளைவு ஜனநாயக அரும்பு என்பது விளங்கும்.

வடஆற்காடு மாவட்டத் திராவிடர்கழகம், திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றப்பட்டது — காஞ்சிபுரத்திலிருந்து பன்னிரண்டு மைல் தொலைவிலுள்ள, திருவத்தி புரத்தில் நடைபெற்ற கூட்டத்தின் விளைவாகத் திருவத்திபுரம் தோழர் சுப்பராயனார் இதை முன்னின்று நடத்தி வைத்தார். நான் காஞ்சிபுரத்தில் தான் ஐந்து நாட்களாக இருந்து வருகிறேன் — அன்பர் சுப்பராயனும் எனக்கு மிகவும் வேண்டியவர் தான் பன்னிரண்டு மைல் தான் இருக்கும் திருவத்திபுரம் — எனினும் நான் அவரைக் கண்டு பேசியிருக்கிறேனா இதுபற்றி, அல்லது கடித மூலமாவது அவருக்குக் கருத்தளித்தேனா ? இல்லை. நண்பர், அருகாமையில் உள்ளவர் — எனினும் அவரைக் காணவுமில்லை, காரியம் இன்னவிதம் நடைபெற வேண்டும் என்று கடிதம் அனுப்பவுமில்லை — எப்போதுமே நான் இடம் கேட்டுக் கொண்டோ, கதவைத் தட்டியபடியோ இருந்து பழக்கப்பட்டவனல்ல.

இப்போதுங்கூட, இரயிலிலே கூட்டம் அதிகம் என்றால் போகாமல் நின்றுவிடுபவன் — இடித்திக் கொண்டு உள்ளே புகுந்துகொள்பவனல்ல. கழகத்தலைவர், என்னைச் சந்தேகிக்கிறார், துரோகி என்று எண்ணுகிறார் என்று துளிஜாடை தெரிந்திருந்தால்கூட, நான் அவர் அதுவரை காட்டிய அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றி செலுத்திவிட்டு, வெளியே வந்துவிட்டிருப்பேன். நான் பலதடவைகளிலே எடுத்துக் கூறியிருக்கிறபடி, இந்தப் பரந்த உலகிலே, என் போன்ற சாமான்யர்களுக்கும் இடம் இருக்கிறது — ஆதீனங்களின் ஆதரவே இல்லாத பண்டாரங்கள் இல்லையா — அதுபோல இருந்து விட்டிருப்பேன் ஒருதுளியும் ஜாடைகூடக் காட்டினதில்லை. என்னைச் சோம்பற்குணமுள்ளவன் என்று கண்டித்திருக்கிறார் வாலிபர்களுடன் கூடித்திரிகிறேன் என்று பேசியிருக்கிறார். 'துரோகி' என்று அவர் சொன்னதுமில்லை - அப்படி ஒரு எண்ணம் அவர் உள்ளத்திலே இருந்திருக்கக்கூடும் என்று கூட நான் எண்ணிட நேரிட்டதில்லை. என்னிடம் அவர் காட்டி வந்த அன்பும் மரியதையும், என்னைப்பல சமயங்களிலே வெட்கப்படும்படி செய்து விட்டிருக்கிறது. நன்றாகக் கவனமிருக்கிறது, ஈரோட்டுக்கு என்னை முதன்முதலாக அவர் அழைத்து பொதுவாழ்வில் ஈடுபடுவதின் விசேஷத்தைக் கூறினது — பிறகு நான் ஊர் திரும்பப் புறப்பட்ட போது, அவருடைய வீட்டுப் பெரியவண்டியைப்பூட்டி அதிலே நான்

உட்கார்ந்து கொண்டு வண்டிகிளம்ப, அதன்பின்னோடு, பத்துவீடு வரையில் அவர் வந்தது — நான் வண்டிக்குள்ளே பதறி நில்லுங்கள், வரவேண்டாம், நில்லுங்கள் என்று கூறினது வெட்கப்பட்டது — ஆகிய காட்சிகள். அன்று முதல் திருமணப்பிரச்னை பயங்கரமான உருவம் எடுத்த நாள்வரையில், என்னிடம் அவர் நடந்து கொண்ட முறை என்னைப்பற்றி அவர் கேவலமான எண்ணமோ, கெடுதலான எண்ணமோ கொண்டிருக்கிறாரா, என்று யோசிக்க வேண்டிய அவசியத்தையே உண்டாக்கியதில்லை. பலதடவைகளில் என்னிடம் கோபித்துக்கொண்டிருக்கிறார் — நானும் கோபம் கொண்டிருக்கிறேன் — பல ஆண்டுகளுக்கு முன்பு ஈரோட்டிலிருந்து விடுதலை வெளி வந்து கொண்டிருந்த போது, கோபித்துக் கொண்டு, ஊருக்கே வந்து விட்டிருக்கிறேன். என்னைச் சமாதானப்படுத்தவும், என்னிடம் தமக்கு உள்ள அன்பைக் காட்டவும், பெரியாரும், அவர் அண்ணாரும், தனித் தனியாக எனக்கு எழுதிய கடிதங்கள், என்னிடம் உள்ளன! இன்று என்னைப் பெரியார் 'துரோகி'ப் பட்டியலில் சேர்த்துப் பேசும் போது, நான் அந்தக் கடிதத்தைக் கவனப்படுத்திக் கொண்டு, சாந்தி பெறுகிறேன், உண்மையாகவே, சந்தோஷமும் கொள்கிறேன். இன்று கோபமும் ஏமாற்றமும் கொண்ட நிலையில், துரோகி என்றும் சுயநலக் காரனென்றும் தூற்றினாலும், பற்றும் பாசமும் காட்டியிருக்கிறார் முன்பெல்லாம் என்பதை எண்ணும் போது, சந்தோஷமே உண்டாகிறது.

'திராவிடநாடு'
16 · 10 · 49

தோழர்களே!

மகிழ்ச்சிக்குரிய செய்தி ''திராவிடநாடு,, இதழுக்குச் சர்க்கார் ஜாமீன் தொகை மூவாயிரம் ருபாய் கட்டும்படி கேட்டிருந்ததைக் குறித்துத் தொடுத்த வழக்கிலே, தீர்ப்பு நமக்குச் சாதகமாகக் கிடைத்து விட்டது.

''திராவிடநாடு,, இதழிலே சர்க்கார் குறித்துக்காட்டிய கட்டுரைகள் வகுப்புத் துவேஷத்தை மூட்டுவன அல்ல என்று தீர்ப்பளித்து, சர்க்கார் உத்தரவை' சென்னை உயர்நீதிமன்றம் ரத்துசெய்து விட்டது.

இந்தத் தீர்ப்பு, நமது தோழர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியும் எழுச்சியும் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை

இதனையொட்டி சர்காரிடம் கட்டப்பட்டிருக்கும் 'மூவாயிரம் ரூபாயும்' விரைவில், திருப்பித்தரப்படும் என்று அறிகிறேன்.

சர்க்காரின் அறைகூவலை எற்று ஜாமீன் தொகைக்காக நன்கொடையை ஆர்வத்துடன் அளித்த தோழர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், மேற்படி தொகை என்கைக்கு வந்ததும், தோழர்களுக்குத் திருப்பி அனுப்ப இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் ஜாமீன் தொகைக்காக நன்கொடை அனுப்பியுள்ள நண்பர்கள், எந்த முகவரிக்கு, பணம் அனுப்பப் படல்வேண்டும்என்பதைத் "திராவிடநாடு" அலுவலகத்துக்குத் தெரிவிக்கக் கோருகிறேன்

நெருக்கடியின்போது நன்கொடை உதவிய நண்பர்கள் பணம் திருப்பி அனுப்பப்படுவதைத் தவறாகக் கருதாமல், நெருக்கடிகள் எப்போது ஏற்பட்டாலும், இதுபோன்ற ஆதரவுகாட்டும் அன்பினை எனக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தீர்ப்பின் முழு விவரம் கிடைத்தபிறகு, "திராவிடநாடு" இதழில் வெளியிட எண்ணியுள்ளேன்.

வணக்கம்
அன்பன்,
அண்ணாதுரை.
திராவிட நாடு
9 - 11 - 49

— தொடரும் —

---

# தமிழ்ப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும்; தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!

ஆனால்........ தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்!

— பேரறிஞர் அண்ணா.

# "அண்ணாவுக்கு அவமதிப்பா...?"

*கி. மணிவீரன்*

இப்படியொரு கேள்வி, தமிழகத்தில், தமிழர்கள் நடுவே எழுப்பப்படுவது குறித்ததான வேதனையுடன் தான் இதனை எழுதுகிறேன். அப்படியொரு வேதனையான நிகழ்வு பெங்களூரில் 23 - 8 - 93 அன்று கூடிய சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் கூட்டத்தில் நடந்திருக்கிறது. ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் ஒருவராகக் கலந்துக் கொண்ட முனைவர். ஆறு. அழகப்பனார் அவர்கள் அங்கு நடந்ததை மனக் குமுறலோடு வெளிப்படுத்தியிருக்கிறார்.

சாகித்திய அகாதெமி என்பது இந்திய தேசீய மொழிகளில் வெளிவரும் சிறந்த நூல்களுக்குப் பரிசு வழங்குவதுடன், கலை, இலக்கிய, சமூக, அரசியல் அறிஞர்களின் வரலாறுகளையும் சுருக்கமாகவெளியிட்டு வருகின்றது. அவ்வரிசையில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியவர்கள் வாழ்க்கை வரலாற்றினை வெளியிட வேண்டும் என்று முனைவர். அழகப்பனார் தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்.

தந்தை பெரியாரது வரலாற்றை வெளியிடும் - தீர்மானம் வந்த போது, வேறு பிரச்சனைக்குத் தாவி தனது மந்திப்புத்தியைக் காட்டிக் கொண்டிருக்கிறது. அறிஞர் அண்ணாவின் வரவாறு வெளியிடப்பட வேண்டும் என்று முனைவர். அழகப்பனார் முனைப்புக் காட்ட, உடனிருந்த இரு பேராசிரியர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்திட, தமிழிலக்கியத்தின் ஏக வாரிசுகளாக தங்களைக் கருதிக் கொண்டு தந்த கோபுரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் மூவர் எதிர்த்து தீர்மானத்தைத் தோற்கடித்துள்ளனர்.

மாக்சிம் கார்க்கு, செக்காவ், சோலக்கோவ், எமிங்வே, சோலா, பிளாபர்ட், பாலசாக், சார்த்ரே என்றெல்லாம் சர்வதேச இலக்கியம் பேசும் இம்மூவரும் அந்தந்த நாட்டு இலக்கியவாதிகளைச் சரியாகப் புரிந்துக் கொண்டிருந்தால் மண்ணின் மரபு, இனவுணர்வுகள் குறித்து தடுமாற்றங்கள் வந்திருக்காது. அறிஞர் அண்ணாவையும், திராவிட இயக்க எழுத்தாளர்களை, சிந்தனையாளர்களைச் சீண்டிப் பார்ப்பது இவர்களுக்கு ஒரு வாடிக்கையாகவே போய்விட்டது. அதுதான் முற்போக்கு என்பதும் இவர்களது எண்ணமுமாகும். இவர்களுக்கு முற்போக்கு முத்திரைப் பதியச் செய்யக்கூட பெரியார், அண்ணா போன்ற திராவிட இயக்கச் சிந்தனையாளர்களே தேவைப்படுகின்றனர். இதுவே இவர்களது சித்தாந்தத்தின் வறுமையைக் காட்டுகிறது.

இத்தகையவர்களை உருவாக்கியவர்கள் பின்னாளில் உணர்ந்து தம் போக்குகளை மாற்றிக் கொண்டுள்ளனர். ''திராவிட இயக்கத்தினர் என்ன எழுதுகிறார்கள்...... பேசுகிறார்கள் என்பதை அறியாமலேயே அவர்களைத் தாங்கிக் கொண்டிருக்கிறோம்'' என்று வருத்தப்பட்ட தியாகி பால தண்டாயுதம் நினைவுக்கு வருகிறார். ''புதுமைப்பித்தன் ஒரு எழுத்தாளனே இல்லை...... மௌனி தான் சிறந்தவர்'' என்று சொல்லிவிட்டு சில ஆண்டுகளில் தமது கருத்தை மாற்றிக்கொண்டு ''ஏதோ லைட்மூடில்'' சொல்லிவிட்டேன்'' என்று புலம்பிய க. நா. சு. வையும் கண்டிருக்கிறோம். இவர்களும் உணர்ந்து மாறும் காலம் வரும்.

''கொக்கரக்கோ,, என்றும் அற்புதமான சிறுகதையை ஆனந்த விகடன் இதழில் 1934-ம் ஆண்டில் அளித்தார் அண்ணா ''செவ்வாழை,, ''ஜெபமாலை,, ''மரத்துண்டு'' என எறத்தாழ எண்பத்தியேழு சிறுகதைகள எழுதியுள்ளார் நவீனங்கள், நாடகங்கள் என்று அழியா இலக்கியங்களைப் படைத்தவர் இவரது நாடகத்தைக் கண்டு'' இதோ ஒர் பெர்னாட்சா...... ஒரு இப்சென்,, என்று புகழ்தவர் கல்கி அவர்கள்,, ''தம்பிக்கு ...... என்று விளித்துத் தொங்கும் அண்ணாவின் கடித இலக்கியமோ உலகுபுகழ்வரலாறு பெட்டகங்களாகும்.

திருவள்ளுவர் சிலையை பெங்களூரில வைக்க பெரும் ஆதரவு தத்தவரும் ''சம்ஸ்காரா,, என்றும் புரட்சிகர திரைக்காவியத்தை எழுதியவருமான கன்னட இலக்கியப் படைப்பாளர் முனைவர் யூ.ஆர் அனந்தமூர்த்தி அவர்கள் தான் தற்பேது சாகித்திய அகாதெமி தலைவராக இருக்கிறார் அவர் முன்னிலையில் தான் தமிழகம் வெட்கித் தலை குனியத்தக்க இச்சம்பவமும் நடக்கிருக்கிறது முனைவர். அனந்த மூர்த்தி பெரியாரையும் அண்ணாவையும் அறிந்தவர். எனவே அவர் தலைவராக இருக்கும் இத்தருணந்தில் இத்தவறுக்கு இடம் தராமல் மறுபரிசீலனை செய்ய வேண்டு . அவ்வகையில்க தமிழ்ன உணர்வுமிக்கோரின் ஒரு மித்தக்குரல் சாகித்திய அகாதெமிக்கு எட்டிடச் செய்திடல் வேண்டும்.

இதனை உரிய நேரத்தில் வெளிப்படுத்திய முனைவர். ஆறு. அழகப்பளார் அவர்களுக்கும், அதனை எதிரொலிக்கும் வகையில், தலையங்கம் தீட்டிய முரசொலி (7-9-93) நாளேட்டிற்கும் அதற்கடுத்து ஒரு நாள் விட்டு அதே ஏட்டில் காடுரையாகக் ஈனன்று எழுதிய முனைவர். தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் நன்றி தெவிப்பதுடன் அவர்களையொட்டி பேரறிஞர் அண்ணா இலக்கியப்பேரவை தமது கண்டனக் குரலை இணைந்து வழிமொழிகின்றது!

— கி. மணிவீரன்
(கி. வீரமணி)
16. திருநீலகண்டர் தெரு,
திருப்பத்தூர் - வ. ஆ. அ. மா,
—635602.

# திரட்டு

## பாலஸ்தீன தனிநாடு உதயம்:

இஸ்ரேல் நாட்டுக்குள் உள்ள பாலஸ்தீன மக்கள் தனிநாடு கேட்டு கடந்த 46 ஆண்டுகளாக போராடி வந்தனர் - அவர்களுக்கு தன்னாட்சி வழங்க இஸ்ரேல் கடைசியாக சம்மதித்தது இஸ்ரேல் நாட்டுக்குள் பாலஸ்தீனம் இருக்கிறது பாலஸ்தீன பகுதியில் பகுதியில் உள்ள அரபு மக்கள் தனிநாடு கேட்டு போராடி வந்தனர். பாலஸ்தீனியர்கள் கொரில்லாபடை அமைத்து தனிநாடு கேட்டு போராடி வந்தனர். விடுதலைப் படையின் தலைவராக யாசர் அராபத் இருக்கிறார். கடந்த 46 ஆண்டுகளாக இந்தப் போர் நடந்து வந்தது. இப்போது இந்தப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு, இஸ்ரேல் அதிபர் ராபினும், பாலஸ்தீன தலைவர் அராபத்தும் உடன்பாட்டுக்கு வந்தனர். பாலஸ்தீனியர்களுக்கு தனிநாடு வழங்கும் வகை அராபத்தை அரபு மக்கள் பிரதிநிதியாக இஸ்ரேல் அங்கீகரித்தது. இது தொடர்பான ஒப்பந்தம் அமெரிக்காவில் வாஷிங்டன் நகரில் உள்ள குடியரசு தலைவர் மாளிகையில் 13 - 9 - 93 அன்று கையெழுத்தாகியது.

✣ ✣ ✣

## இலக்கியப் பறவைகள் — திருப்பத்தூர்

"இலக்கியப் பறவைகள்" என்னும் அமைப்பின் எட்டாவது கூட்டத் தொடர், திருப்பத்தூர் மதர் மெட்ரிகுலேஷன் பள்ளியில் 5- 9- 93 ஞாயிறு காலை 10 - மணிக்கு நடைபெற்றது.

"குறளோ ஓவியம்; அண்ணாவோ......காவியம்!" எனும் தலைப்பில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு T.M.S. பள்ளி தலைமையாசிரியர் திரு. சுப்பிரமணி அவர்கள் தலைமை வகித்தார். இராமகிருஷ்ணா ஆண்கள் மேனிலைப்பள்ளி தமிழாசிரியர் திரு. சோலை. சண்முகனார், திருப்பத்தூர். கி. வீரமணி, புலவர். ச. மு. விமலானந்

தம், நல்லாகிரியர் விருதுபெற்ற திரு. இராசகோபால், ஓவியக்கலையாசிரியர் திரு. சாமி, பிரபாகரன், பாரதி அடிகள், வழக்கறிமுர். திரு. P.V. அனந்த கிருஷ்ணன், திரு. சோலைப்பிரியன் ஆகியோர் பேசினர். ''இலக்கியப்பறவை'' அமைப்பாளர் திரு. G. தனியன் நன்றி நவின்றார்.

✠ ✠ ✠

இந்திய நாட்டில் மத்திய ஆட்சி அதிகார பதவிகளில் பிற்படுத்தப்பட்ட மக்கள் அமர 1949 - ஆண்டு பெரம்பூரில்

# தந்தை பெரியார் அவர்கள் முழங்கியது

செயல் வடிவம்பெற, இந்திய நாட்டின் அரசியல் கட்கிதலைவர்களுக்கு வழி காட்டிய திராவிடர் கழகப் பொதுச் செயலாளர். **கி. வீரமணி** அவர்கள் மற்றும் பல ஆய்வாளர்கள் கருத்தை ஆராய மண்டல கமிஷன் அமைக்மப்பட்டு **V. P. சிங்** அவர்கள் பிரதமர் பொறுப்பு ஏற்றவுடன் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீதம் மத்திய அரசு பணிகளில் பணியாற்றிட இட ஒதுக்கீட்டுக்கு 13 - 8 - 90 ல் சட்டம் நிறைவேற்றி பிரதமர் பதவி இழந்தார் என் மக்களுக்கு சமூகநீதி கிடைக்கும் வரை எனக்கு ஒய்வு இல்லை என்று **V. P. சிங் அவர்களும், கி. வீரமணி அவர்களும் தொடர்ந்து போராடியதால்** 13 - 8 - 93ல் முதல் இந்திய நாட்டின் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிதம் இட ஒதுக்கீடு நடைமுறைக்கு வருகிறது. பொதுத்துறை நிறுவனங்கள் தேசியமய வங்கிகள் உள்பட நிதித்துறை நிறுவனங்களுக்கும் இந்த இட ஒதுக்கீடு பொருந்தும் இதற்கான மத்திய அரசு அறிவிப்பு உத்தரவிட்டு இருக்கிறது இதன் மூலம் மாநில அரசுகள் -மண்டல் அறிக்கையில் குறியிட்டுள்ள பிற்பட்டோர் சாதிகள் வகுப்புகள், குழுக்கள் பயனடையும்.

முன்னாள் பிரதமர் **V. P. சிங்** அவர்களுக்கும்

திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் **கி. வீரமணி**

அவர்களுக்கும்

## நன்றி தெரிவித்து வாழ்த்து கூறுங்கள்

இவன்

கருப்புச் சட்டை மா. சி. பாலு.

திருப்பத்தூர்

# திருமணம்

திருநெல்வேலி மாவட்ட போறிஞர் அண்ணா இலக்கியப் பேர வையின், தலைவர் மு. வயலூர்குமரன் மகள் செல்வி. சுகுந்திக்கும் கடையம் திரு பா. சீனிவாசன் அ வ ர் க ளி ன் மகன் செ ல் வ ன். பால்சங்கருக்கும் 27·8·93 அன்று பாளைங்கோண்டை பெருமாள் புரம் சுமங்கலி திருமணமண்டபத்தில் தமிழ்ச்சுடர் பெரியவர் திரு. மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களின் தலைமையில் திருமணம் நடை பெற்றது. திரு. வை. கோபால சாமி எம்· ஏ. பி· எல்· எம். பி அவர் களும், திரு. ஏ. எல் சுப்பிரமணியன பி. எஸ். சி· பி. எல்· அவர் களும் முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்திப் பேசினர். நெல்லை மாவட்ட தி மு. க. செயலளர் டி· ஏ' கே. இலக்குமணன், பேராசிரியர் க. திருமாறன், புலவர் அறிவுடைநம்பி, சுப. சீதாராமன், பேராசிரியர் மு. செ. குமாரசாமி, பொற்செல்வி இளமுருகு, ஏ. எஸ். கணேசன் தி. மு. க. மாவட்ட இளைஞரணி அமைப்பளார் கோட் டையப்பன், மா. நல்லகண்ணு ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். உறவினர்களும் நண்பர்களும் பெருமளவில் வந்திருந்து திருமண விழாவினைச் சிறப்பித்தனர்

✖ ✖ ✖

## உலகத் தமிழ்க் கவிஞர் பேரவை

பேரவை எடுத்த முடிவின்படி 4. 9. 93- ல்மாமல்லபுரத்தில் நடை பெற்ற மாபெரும் இலக்கிய விழாவில் தலைவர் உவமைக் கவிஞர் சுரதா தலைமையில் பொதுச் செயலாளர் கவிமாமனி சாஸ்தரி வெங்கட் டராமன் ஓய்வு பெற்ற சேலம் மத்திய காவல் மற்றும் சங்கத் துறை உதவி ஆட்சியரும் நல்ல தமிழத் தொண்டரும் சிறந்த கவிஞருமான இலட்சிய கவிஞர் காந்திதாசன் ஐ. ஆர். எஸ், அவர்களை உலகத் தமிழ்க் கவிஞர் பேரவையின் துணைத் தலைவராக தெரிவு செய்து அறிவுப்பு செய்தார்.

மாமல்லபுர இலக்கிய விழாவிலேயே இலட்சிய கவிஞர் காந்திதாசன் பேரவைத் துணைத் தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

உலகத் தமிழ்க் கவிஞர் பேரவைக்குத் துணைத் தலைவராகத் தெரிவுச் செய்யப்பட்ட இலட்சியம் கவிஞர் காந்திதாசன் 15. 8. 93ல் வெளிவந்த திராவிடன் ''என்ற இதழில் சிறந்த பகுத்தறிவுக் கவிதை உலகம் பழித்தது ஒழிக்க ஒன்று சேருவோம்.'' என்ற தலைப் பில் எழுதிப் பரிசுப் பெற்றவர்.

# மடல்கள்

நாட்டின் இரத்த நாளங்களாகத்திகலும் செய்தித் தாள் ஆசிரியர் அவர்களுக்கு வணக்கப்.

பெரியார் மாவட்டம் பவானி மாவட்டம் கவுந்தப்பாடி கிராமம் வேலம்பாளையத்தில் சமுதாயத்தின் கடை நிலையிலுள்ள அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்த 120 க்கு மேற்பட்ட குடும்பத்தினர்களின் சார்பாக விடுக்கும் வேண்டு கோள்.

அய்யா;

இப்பவும் நாங்கள் 400 க்கு மேற்பட்ட மக்கள் தொகையினர்களைக் கொண்ட எங்களில் மத்திய மாநில அரசுப் பணிகளில் ஒருவர் கூட இடம் பெறவில்லை எனபதை தெளிவாக அறிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் 44 குடும்பத்தினர்களுக்கு தலா 5 செண்டு நிலமும், குடிசையோட தலா ஒரு நூறு ரூபாயும் அரசாங்கம் வழங்கியது கவுந்தப்பாடி கிராமம் அன்றைய சர்வே எண் 726/டி. 3 ஏ, 721/ஏ 3 ஏ காலைகளில் நிலம் ஆர்ஜிதம் செய்து வழங்கிய நிலத்திலேயே ஒவ்வொருவருக்கு வழங்கிய 5 செண்டு நிலத்தில் அவர்களது வாரிசுகள் 2,3 திருமணம் செய்து கொண்டவர்கள் தனிதனியாக குடிசை போட்டு அதே நிலத்தில் குடியிருந்து வருகிறோம். 1962 க்குப் பிறகு எங்களுக்காக அரசாங்கம் எவ்வித உதவிகளும், வீடில்லாதவர்களுக்கு நிலமும் அரசு ஆரிஜிதம் செய்து கொடுக்கவில்லை. 1962 ல் வழங்கிய நிலத்திலேயே 100 க்கு மேற்பட்ட குடும்பத்தினர்கள் குடியிருந்து வருகிறோம்.

கீழ்பாவனி உறம்பினால் பாதிக்கப்பட்டு மயானமாகவும், பெண்கள் பருவம் அடைந்த பிறகு குடிசைகளை எரிக்கவும், அம்மை அழைக்கவும். பயன் படுத்திவந்த பழையசர்வே எண் 622 அரசு புறம் போக்கில் 15 க்கு மேற்பட்டவர்கள் குடிசை போட்டு இருந்து வருகின்றோம் நாங்கள் பயன்படுத்தி வந்த—எங்கள் அனுபவத்தில் இருந்த அரசு புறம் போக்கு நிலத்தை அது போது கிரம மணிய கறராக இருந்த 10 ஏக்கருக்கு மேற்பட்ட நல்ல நீர்பாயும் பூமியைக் கொண்ட மணியகாரர் அருணகிரிக் கவுண்டர் தனது மனைவி சுந்தரம்மாள். பெயருக்கு வருவாய்துறை வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து "பி"

மெபோ போடவைத்து அதன் பிறகு யாருக்கும் தெரியாமல் சுந்தரம் மாள் அனுபவிக்காமல் இருந்த நிலத்தை பட்டா பெற்று அதில் குடிசை போட்டு சுற்றுவேலி அடைக்க முயன்ற போது ஊர் பொது மிக்காகறம் அருணகிரிக் கவுண்டரும் சுந்தரம்மாளும் போட்ட வேலியை அப்புறப் படுத்தி அவர் குடிசை போட்டுக் கொண்டு வந்த சாமான்களையும் தீ வைத்துக் கொளுத்தி விட்டோம்.

எப்படியும் எங்களை அந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டுமென்ற ஆதிக்கமனப்பான்மையில் வேதம் பாளையம் கூட்டு றவு விவசாயக் கடன் சங்கத்திற்கும், கவுந்தப்பாடி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் தான் செட்டில்மெண்டு எழுதிக் கொடுத்துள்ள விவ ரத்தை தமிழ்க அரசுக்கும் மாநிலவருவாய்த்துறையினர்களுக்கும் தெரி வித்தும் எங்களது குறைகளக் கேட்க நாதியில்லை.

தேர்தல் வந்தால் ஒழுகாத வீடு — கிழியாத உடை — வயிறு நிறைய உணவு ஒவ்வொரு இந்தியக் குடி மகனுக்கும் அளிக்கவே இருக்கிறோம் என்று கூறி வாக்குகளைப் பெற்று சட்ட மன்றத்திற்குச் சென்ற பின் எங்களை மறந்து விடுகின்றனர்.

கிராம முன்னேற்றத்தில் தான் நாட்டின் முன்னேற்றம் உள்ளது என்று சான்றோர்கள் கூறியுள்ளனர்.

இந்தியநாடு விடுதலை பெற்று 45 ஆண்டுகளுக்கு மேலாகியும் சமுதாயத்தில் கடை நிலையிலுள்ள அருந்தியர்கள் குறைகளை போக்குவதற்கு அரசாங்கமும் அரசு அதிகாரிகளும் முன்வரத் தயங்கு கின்றனரேயன்றி நல்வாழ் அமைத்துக் கொடுக்க தயங்குகின்றனர் கல்வி அறிவில்லாத எங்களுக்குத் தகுந்த மத்திய - மாநில அரசுகளில் வேலைவாய்ப்பு அளித்தால் தொழில் மாற்றத்தினால் எங்களது சந்ததி யினர்கள் கல்வி கற்று அரசாங்க வேலைகளில் அமர ஒரு வாய்ப்பாக அமையும்.

சாதி மத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்று 45 ஆண்டுகளுக்கு மேதாகவும் அதற்கு முன் வெள்ளையன் ஆட்சி காலத் திலுல் கூறிவந்தோம் ஆனால் அதை நடைமுறைப்படுத்த இடையூ றாக இருப்பது பற்றி அரசு சிந்தித்து எங்தளுக்கு வாழ்க்கையிலும் சமு தாயத்திலும் அனைத்து மக்களுடன் ஒன்றி இருக்கத்தக்க வழிவகை களை அரசு செய்ய தங்களைப் போன்ற செய்தித் தாள் ஆசிரியர்கள் எங்களது குறைகளை தொடர்ந்து எழுதினால் அரசின் கவனம் எங்கள் சமுதாயத்தின் மீது செலுத்தும் என்பதால் தங்களை தாழ்த்தப்பட்ட - சமுதாயத்தில் கடை நிலையிலும் பொருளாதாரத்திலும் வறுமையின்

நிரந்தர உறுப்பினர்களாகவும் இருந்து வரும் எங்களுக்கு விமோசனம் ஏற்பட வழி பிறக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையில் தங்களது உதவியை நாடுகிறோம் எங்கள் காலனியில் உள்ள 400 க்கு மேற்பட்ட மக்களும் அரசுப் பணியில் இல்லாதது மட்டுமல்ல. தற்போது 10 ம் வகுப்பு, 12 ம் வகுப்புப் படித்து பேருந்து நடத்துனர் உரிமம் பெற்றுள்ளவர்களுக்கும் வேலை வேண்டுமானால் இருபத்தைந்தாயிரம் கேட்கின்றனர். இந்த நிலையில் எவ்வாறு எங்கள் சமுகம் முன்னேற முடியும் என்பதை தங்களுக்குத் தெரிவித்து தங்களது விசேட நிருபரை எங்களது காலனிக்கு அனுப்பி வைத்து எங்களுக்கு உண்டான குறைகளை விமர்சித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்க தங்களது பேருதவியை நாடுகிறோம்.

செயலாளர் — தலைவர்
கிட்டன் — சின்னவீரன்

வாழிய பசுந்தமிழ் 180893

அன்புமிக்க காஞ்சி நாடு ஆசிரியர் அவர்களுக்கு
வணக்கம்.
நான் பிறந்து வளருமுன்னே
16 நாள் குழந்தையாக
இருந்தபோது
மறைந்த பேரறிஞர் அண்ணாவைப்
பற்றி தெரிந்து கொள்ள
ஆசைப்படுகின்றேன்,
சூழ்ச்சி அரசியலில் அண்ணா
அவலமாக்கப் படுகின்றார்.
எனவே
காஞ்சி நாடு எனக்கு வேண்டும்.

ம. தென்னரசு.

அன்புள்ள டாக்டர் அவர்கட்கு வணக்கம் இந்தத் திங்கள் காஞ்சி நாடு இதழ் சிறப்பாக அமைந்துள்ளது. அண்ணாவின் தன் வரலாறு பகுதி, அவர் வரலாற்றின் திருப்பு முனையாக அமைந்த முக்கிய பகுதிகளைக் கொண்டு சிறப்படைந்துள்ளது.

திரு. அ. கி. மூர்த்தி அவர்களின் கட்டுரையில் அண்ணா அவர்கள் பேசிய இறுதி வார்த்தைகளைக் குறிப்பிட்டுள்ளது கண்களைப் பனிக்க வைத்துவிட்டது அந்தநாள் நினைவுகளெல்லாம் படமாக ஓடத்தொடங்கி விட்டன மனத்திரையில்,

பெரியவர் T. K. S. மணி அவர்களை என்னால் மறக்க முடியாது. அண்ணா அவர்கள் இறுதியாக காஞ்சிக்கு வந்துவிட்டுச் சென்

றதை தான் பயின்ற பச்சையப்பன் கல்லூரி போன்ற பகுதிகளை சோக இழையோடப்பார்த்த நிகழ்ச்சிகளை ''அண்ணா வந்த கடைசிநாள்'' என்று தலைப்பிட்டு மணி எழுதிய கட்டுரையின் ஒவ்வொரு எழுத்தை யும் படிக்கவில்லை! கண்ணீரால் நனைத்தேன். இருபதாண்டுகளுக்குப் பிறகும் அந்தக் கட்டுரை அதே உணர்வைத் தருகிறது.

அவர் இப்போது தன் பிறந்தநாள் செய்தியை ஒரு உரை நடைக் கவிதையாகத் தந்துள்ளார். இது அவரின் மரண சாசனம் என்றால் பொருத்தபாக இருக்கும். அதில் கூட இயக்கத்தின் இன்றைய சூழ்நிலையை சுட்டிக்காட்டி அண்ணாவால் உருவாக்கப் பட்ட இயக்கம் சீரோடும் செம்மையாகவும் இயங்கத் தடையாக உள்ள சூழல்கண்டு மனம் வருந்தியுள்ளார்.

புலவர் முருகேசன்

பெருமதிப்பிற்குரிய டாக்டர் சி. என். ஏ. பரிமளம் அவர்களுக்கு,
இதயம் வணங்குகிறது.

'காஞ்சிநாடு' தொடர்ந்து வருவது கண்டு மகிழ்கிறேன். தாங்கள் நாடு பூராவும் பேரவையை அமைத்துச் செயல் படுவதையறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். பெரிய தலைவர்களின் துணையில் லாமல், தாங்கள் இத்துறையில் அஞ்சாமல் ஈடுபட்டிருப்பது ஒன்றே, தாங்களின் குலையாத கொள்கை மனத்தைக் காட்டுகிறது. நாங் களெல்லாம் என்றைக்கும் பின்பலமாக இருப்போம்.

புலவர். இளஞ்செழியன் எம். ஏ

---

# சொல்

சொல்லியே பதரும் உண்டு
நெல்லும் உண்டு
கானலும் உண்டு, நீரும் உண்டு
கண்டறிய வேண்டும், அதற்கு
காது மட்டும் பயன் பட்டாற் போதாது
கருத்து சுறுசுறுப்பாக வேலை
செய்தபடி இருக்க வேண்டும்

அண்ணா.
30 - 5 - 65

---

'ஓசை நயம தேடுவதும்
தருவதும் குற்றமன்று
இசைக் கலையே ஓசை நயத்தை
தாப்படுத்தி தாப்படுவது தானே'

அண்ணா.
18 - 3 - 56

# அண்ணாவை அவமதித்த சாகித்ய அகாதெமியின் அநாகரீகம்

பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று தமிழ் மக்கள் உள்ளங்களில் கொதிப்பையும் குமுறலையும் ஏற்படுத்துவதாக அமைந்திருக்கிறது.

23.8.93 அன்று பெங்களூரில் நடைபெற்ற சாகித்திய அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் கூட்டத்தில் நடைபெற்ற ஒரு அநியாயம் - அநாகரிகம் - துரோகம் பற்றி அவர் தமது அறிக்கையில் கீழ்க் கண்டவாறு உள்ளம் நொந்து குறிப்பிட்டிருக்கிறார்.

"சாகித்திய அகாதெமி இந்திய நாட்டில் தோன்றிய அறிஞர்கள், அடியார்கள், படைப்பிலக்கியவாதிகள் முதலியோர் வாழ்க்கை வரலாறுகளை வெளியிடுதலைத் தன் குறிக்கோளகளில் ஒன்றாகக் கொண்டுள்ளது. இந்தியாவில் உள்ள பல்வேறு மாநிலங்களிலும் தோன்றிய இத்தகைய பெரியவர்களின் வரலாறுகளைத் தக்கவர்களை அழைத்துச் சுருக்கிய வடிவில் அறிஞர்களின் வரலாறுகளை வெளியிட்டு வருகின்றனர். பிறகு அவ்வரலாறுகள் இந்திய தேசிய மொழிகளில் மொழி பெயர்க்கப்படுவதும் உண்டு. அவ்வகையில் தமிழில் பின் வரும் பெரியவர்கள் வரலாறுகள் வெளிவந்தன. சில வெளிவரும் தருவாயில் உள்ளன. அவ்விவரம் வருமாறு —

இராமலிங்கர், திருவள்ளுவர், பாரதியார் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம், புதுமைபித்தன், பம்மல் சம்பந்தனார், இரசிகமணி டி. கே. சி. கே. எஸ். வெங்கடரமணி, ஆண்டாள், மாணிக்கவாசகர், சேக்கிழார், தொல்காப்பியர், நம்மாழ்வார், கு. ப. ராஜகோபாலன் வையாபுரிப்பிள்ளை. வேதநாயகம், வா. ரா., ஏ. கே. செட்டியார் நா. பார்த்தசாரதி, தெ பொ. மீ. மு. வ., வ சுப மாணிக்கம், கோதை நாயகி அம்மாள், கண்ணதாசன், பாரதிதாசன். தி. ஜானகி ராமன், மறைமலை அடிகள், ஔவையார், குமரகுருபரர், இராஜாஜி, அகிலன், க நா சு. கோபாலகிருஷ்ணபாரதி வ. வே. சு. அய்யர், வீரமா முனிவர் திரு வி. க. கல்கி. சண்முகசுந்தரம் ஆகிய இவர்களது வரிசையில்,

பேரறிஞர் அண்ணா அவர்களது வரலாறும் வெளிவர வேண்டும் என்றும், அவரது வரலாற்றை — அவரை நன்கறிந்த கல்லூரிலிருந்து ஓய்வுபெற்ற ஒரு பேராசிரியர் எழுதவேண்டும் எனறும் ஒரு

தீர்மானத்தை 23. 8, 93 அன்று நடந்த அகாதெமியின் தமிழ் ஆலோசனைக் கூட்டத்தில் ஒரு விவாதப் பொருளாகக் கொண்டு வந்தேன்.

சாகித்ய அகாதெமி அம்பேத்கர் வரலாற்றை வெளியிட்டுள்ளது அதேபோல் தந்தை பெரியார் வரலாற்றையும் வெளியிடவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டேன்: விவாதம் அறிஞர் பற்றித்திரும்பி விட்டதால் அது தவிர்க்கப்பட்டது.

திரு. ஜெயகாந்தன், திரு, சார்லஸ், திரு. கந்தசாமி ஆகிய மூன்று உறுப்பினர்களும் அறிஞர் அண்ணாவின் வரலாற்றை சாகித்ய அகாதெமி வெளியிட வேண்டிய தில்லை என்றும். அவரது படைப்பிலக்கியங்கள் இலக்கியத்திற்கு உட்பட்டதாக இல்லை என்றும் எதிர்ப்புத் தெரிவித்தார்கள்.

என்னுடன் உறுப்பினராக இருந்த இரண்டு பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள் இது பற்றி எதுவுமே பேசவில்லை.

மேலே சுட்டிக்காட்டியவர்களின் பட்டியலில் உள்ளவர்களைவிட அறிஞர் அண்ணாவின் இலக்கியத் தொண்டு கொச்சைப் படுத்தப்பட்டதாகவே உணருகிறேன்''

— என்று வருத்தத்துடன் குறிப்பிட்டிருக்கிறார் பேராசிரியர் ஆறு. அழகப்பனார்.

சாகித்ய அகாதெமி- அண்ணாவின் வரலாற்றை எழுதாமல் இருப்பதே அண்ணாவுக்கு அது செய்யும் பெரிய மரியாதையாக இருக்கும் என்பதுதான் உண்மை நிலவரம்! அண்ணாவின் படைப்புக்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை அல்ல என்று வாதிட்டவர்களின் பட்டியலைப் பார்த்தாலே தெரியும். இவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருக்கும் ஒரு அகாதெமியின் நோக்கும் போக்கும் எப்படிப்பட்டதாக இருக்கும் என்று!

ஜெயகாந்தன்-இந்தத் தலைமுறைச் சேர்ந்த வாசகர்கள் அறிந்திராத - அவர்களுக்குத் தொடர்பற்ற - ஒரு மாஜி எழுத்தாளர்! மற்ற இரண்டு பேர் பற்றியும் நாம் எதுவும் குறிப்பிடவே விரும்பவில்லை! இப்படிப்பட்டவர்கள் எல்லாம்கூடி - அண்ணாவுக்கு வாழ்க்கை வரலாறு வெளியிடும் அளவிற்கு அவருக்கு தகுதி இல்லை - என்று வாதிடுவதும் - க. நா. சு., கே. எஸ். வெங்கட்ரமணி, கோதை நாயகி அம்மாள் போன்றவர்கட்கெல்லாம் வரலாறு வெளியிடலாம்; அண்ணாவுக்கு அந்தத் தகுதி இல்லை என்று வாதிப்பதும் - அதனை



JL M2U3 N42 K4 217214

சாகித்ய அகாதெமி தலைவர் யு. ஆர். ஆனந்தமூர்த்தி ஏற்பதும் — சாகித்ய அகாதெமியில் இடம் பெற்றவர்களின் திமிர் - தங்கள் தகுதிக்கு மீறிய வகையில் அவர்கள் தங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிற முட்டாள் தனம் ஆகியவைகள் சம்பந்தப்பட்டதாக இருக்கலாமே தவிர - அண்ணாவின் படைப்பிலக்கியம் பற்றிய மதிப்பீடாக ஒரு போதும் இருக்க முடியாது!

சாகித்ய அகாதெமியின் அங்கீகாரம் பெறாத பல எழுத்தாளர்கள் வாசகர்களின் உள்ளங்களில் நிரந்தர இடம் பெற்று நீங்காபுகழோடு விளங்குவதையும் சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற பின்னர் — விலாசமே இல்லாது போன 'பிரபலங்களும்' உண்டு என்பதை விளக்கிட ஒரு நீண்ட பட்டியலே உண்டு!

பேராசிரியர் அழகப்பனார் - தமது அறிக்கையின் இறுதியில் ''அண்ணா பிறந்த நாளையொட்டி அனைவரும் அண்ணாவின் வரலாற்றை வெளியிடக்கோரி - சாகித்ய அகாதெமிக்கு கடிதம் எழுதி வலியுறுத்தவேண்டும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்!

அதற்கு ஒரு சிறுதிருத்தம் - அண்ணாவை அவமதிக்கும் வகையில் அநாகரிகமாக நடந்து கொண்டதற்காக சாகித்ய அகாதெமியைக் கடுமையாகக் கண்டித்து - தந்திகள் - கடிதங்கள் அனுப்பலாமேதவிர - கற்பூரவாசனை அறியாதவர்களிடம் வேண்டுகோள் விடுப்பதில் அர்த்தம் என்ன இருக்க முடியும்?

சாகித்ய அகாதெமியின் திமிர்வாதத்தை - அநாகரிகத்தை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்ற நன்றியுணர்வோடு முன்வந்த பேராசிரியருக்கு தமிழ் கூறும் நல்லுலகம் தனது பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது!

நன்றி — 'முரசொலி'

# நல்ல தீர்ப்பு

தீர்ப்பு என்றால் பலவிதமுண்டு. ஆண்டவன் அடியாருக்கு ...கும் தீர்ப்பு ஒருவிதம். அரசன் குடிகளுக்கு அளிக்கும் தீர்ப்பு மற்றொரு விதம். சட்டசபை தீர்ப்பு மற்றொரு தன்மையானது, வலியோர் எளியோர்க்கும் முதலாளி தொழிலாளிக்கும் அளிக்கும்தீர்ப்பு பிறிதொரு தன்மையானது. இவையாவும் நல்ல தீர்ப்பு என்றே அவரவர் நவிலுவர் ஆனால் தீர்ப்பு காலத்திற்கு தக்கவாறும் — நிலைமைக்கு தக்கவாறும் மாறும் — மாறித்தான் தீரும். தீரவேண்டும். ஒரு காலத்தில்

நன்கொடை ரு 3-00 பதிவு எண்: G6/TN/MS(C)1239

காஞ்சி
நாடு

நல்லத்தீர்ப்பாக விளங்கியது. பிறிதொருகாலத்திலே நல்லதீர்ப்பு அல்ல என்று எள்ளி நகையாடப்படும்.........

சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் தீர்ப்பு எதுவானாலும் அது தான் 'நல்லத்தீர்ப்பு' நல்லதீர்ப்பு நல்லவர் செய்யும் தீர்ப்பாக என்றும் இருக்காது. ஏனெனில் நல்லவர்கள் தீர்ப்பு, என்றும் இரக்கமுடையதாகவே இருக்கும்.

நீதி என்றும் நிலை பெற்றதா?

நீதி நிலமைக்கு தக்கபடிமாறும் நிகண்டுக்குக் கட்டுப்பட்டு நிற்காது. சான்றாக ரயிலுக்கு தாமதமாகச் செல்பவன் ரயில் தவறினால் ரயில் சிக்கிரம் போய் விட்டதென்று குறை கூறுகிறான் அது தான் நிலைக்கேற்ற நீதி ஆனால் அதே இரயிலில் அரைமணி முன்னதாக சென்று அமர்ந்திருப்பவன் அதை கட்டைவண்டிக்கும் கூட்ஸ் வண்டிக்கும் ஒப்பிடுகிறான், இது இவனது நிலைக்கேற்ற நீதி.

நல்லதீர்ப்பு,

---

ஆசிரியர், வெளியிடுபவர் : மலர்வண்ணன் அண்ணாதுரை
7, அவின்யூ சாலை, சென்னை-34.
அச்சிடுபவர். C .R.கண்ணன், அண்ணன் அச்சகம், சென்னை-24.

பெறுநர் :
திரு / திருமதி
Director
Tamil Nadu Archives
MS-8

விடுநர் :
பேரறிஞர் அண்ணா
இலக்கியப் பேரவை
7. அவின்யு சாலை,
சென்னை-600 034
பேசி: 8278570